**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 483/2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 4 |
| Name | : | விஜயன், வயது 27 |
| Father Name/Husband Name | : | கோவில்பிள்ளை |
| Village | : | செட்டிக்குறிச்சி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | ஒர்க் ஷாப் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of April 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது செட்டிக்குறிச்சியில் வசித்து ஒர்க் ஷாப்பில் வேலை செய்கிறேன். எதிரியை தெரியும் சம்பவத்தின் போது தெரியும். அ.சா.1 ஐ தெரியாது. வழக்கில் இறந்த நபர்களை தெரியும் விபத்தின் போது தெரிந்து கொண்டேன்.

கடந்த 13.01.2021 ஆம் தேதி காலை 06.15 மணிக்கு இடைசெவல் பஞ்சர் கடை அருகே தேசிய நெடுஞ்சாலையில் எஸ் எம் பிக்கு சொந்தமான சிமெண்ட் ஏற்றி வந்த லாரி பதிவு எண் TN 37 BF 7599 பஞ்சர் பார்த்துக்கொண்டிருந்த போது டாடா ace வாகனம் வடக்கில் இருந்து தெற்காக வந்து லாரியின் பின்னால் மோதியதால் விபத்து ஏற்பட்டது.

மேற்படி டாடா ஏசி வாகனத்தில் வந்த இரண்டு பேருக்கு எலும்பு முறிவும், சுமித்ரா, யாஷிகா ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். மற்ற இரண்டு நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் காயம் பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. விபத்து நடந்த இடத்திற்கு கிழக்கு பக்கம் தான் உங்கள் கடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கும் உங்கள் கடைக்கும் இடையே 200 அடி இடைவெளி இருக்கும் என்றால் சரிதான்.
2. உங்கள் கடையின் முன்னால் அந்த லாரியை பஞ்சர் பார்த்திருந்தால் விபத்து நடந்திருப்பதற்கான வாய்ப்பு குறைவு என்றால் சரிதான். ஒரு வாகனம் ரோட்டில் பஞ்சர் ஆகிவிட்டது என்றால் மேற்படி வாகனம்

பின்னால் வரும் வாகனங்களுக்கு தெரியும் படி மேற்படி வாகனத்தை சுற்றி கூம்புகள் வைக்கப்படும் என்றால் சரிதான்.

3. நீங்கள் மேற்படி லாரியை பஞ்சர் பார்க்கும் போது கூம்புகள் மேற்படி லாரியை சுற்றி வைக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் லாரியின் முன்புறம் வீலை கழட்டிக்கொண்டிருந்ததால் டம் என்று சத்தம் கேட்ட பின்னர் தான் விபத்து பற்றி தெரிந்து கொண்டீர்கள் என்றால் சரிதான்.
4. டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டி வந்த நபர், பெயர், விலாசம் ஆகியவை போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவ நேரம் அதிகாலை என்றாலும் லேசாக மழை பெய்து கொண்டிருந்தது என்றாலும் சரிதான்.
5. நீங்கள் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் லாரி டிரைவரின் அஜாகிரதையும் கவனகுறைவும் தான் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.